**கண்டி மாநகர சபை - 2024**

-----------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய பதிவுகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கண்டி மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும்

எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மத எல அபிவிருத்திகாக மீளாய்வாண்டின் இறுதி திகதியில் கண்டி மாவட்ட செயலாளரிடம் இருந்து பெற வேண்டி ரூபா 8,553,842 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்து கொள்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட 05 அபிவிருத்தி திட்டங்களுக்கு உரிய கிடைத்த ரூபா 3,655,074 தொகை மூலதன வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்ய வேண்டிய போதிலும் செலவின விடயத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | அபிவிருத்தி செலவினை விடயத்திலிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டதால் உரிய தலைப்புக்கு மிகை அறவீடு செய்யப்பட்டதாக. | மூலதனம் வருமான பெறுவனவு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | உலக மரபுரிமை திட்டத்தில் நிதியக் கணக்கின் மீதி ரூபா 1,294,266 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஈ) | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் எஞ்சிய நிதிஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா ரூபா 971,887,255 தொகை தீர்வு செய்யப்படாமல் செலவினமாக கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | கடன் கொடுத்தோர் மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கடன் கொடுத்தோர் சரியாக எதிர்வு கூறப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 09 சொத்து உருப்படிகள் மற்றும் ஒரு பொறுப்பு உருப்படியின் மீதிகளை தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 247,245,127 இணக்கமின்மை காணப்பட்டது. | எதிர்காலத்தில் அதை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகள் தொடர்புடைய அட்டவணைகளுடன் சரிசெய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி நிதிக் கூற்றுக்களின் படி நீர் துறையிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 383,317,040 ஆக இருந்த போதிலும் கணினி முறைமையின் படி மீதியானது ரூபா 376,272,288 ஆக இருந்தது. இதன் விளைவாக ரூபா 7,044,752 இணக்கமின்மை காணப்பட்டது. | கணக்கு மீதிகளுக்கு இடையிலான வேறுபாட்டை கணினி முறைமையின் மூலம் சரிசெய்ய தேவையான நடவடிக்கைகள் மிகவும் துரிதமாக எடுக்கப்படும் என்பதாக. | நிதிக் கூற்றுக்களில் உள்ள கணக்கு மீதிகளை கணினி முறைமைகளில் உள்ள மீதிகளுடன் சீராக்கப ் படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிற்கு நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 2,275,814,461 ஆக இருந்த போதிலும், வருமானத்திலிருந்து மூலதனச் செலவு பங்களிப்புக் கணக்கின் மொத்தமும் மற்றும் நன்கொடைகளிலிருந்து மூலதனப் பங்களிப்பு கணக்கின் மொத்தமும் ரூபா 2,271,617,127 ஆக மாறியமையினால் ரூபா 4,197,334 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. | 2025 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கும் போது கணக்குகளை ஒப்பிட்டு சரிசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாக. | நிலையான சொத்துக்களின் மொத்த பெறுமதி மூலதன ஈடுபாட்டிற்கு வருமானம் மற்றும் நன்கொடைகளால் பங்களிக்கும் கணக்குகளின் கூட்டுத்தொகையுடன் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிற்கு நீர் துறையிலிருந்து பொதுத் துறைக்கு பெற வேண்டிய தற்கலிகக் கடன் ரூபா 144,586,056 ஆக இருப்பினும் , நீர் துறைக்கு செலுத்த வேண்டிய தற்காலிகக் கடன் தொகை ரூபா 139,486,056 எனக் குறிப்பிடப்பட்ட மையினால் ரூபா 5,100,000 ஆன இணக்கமின்மை யொன்று காணப்பட்டது. | முன்னைய ஆண்டுகளுக்குரிய வேறுபாடாகும். ஒப்பீட்டுப் பார்த்த பின்னர் பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | ஒன்றோடொன்று ஒப்பிட வேண்டிய கணக்கு மீதிகளை சமப்படும் வகையில் கணக்குகள் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | நடப்பாண்டு இறுதியில் நீர் துறையில் வசூலிக்கப்பட்ட மொத்த பெறுமதி சேர்க்கபபட்ட வரி ரூபா 288,463,950 ஆக இருந்த போதிலும், அது பெறுமதி சேர்க்கப்பட்ட கட்டுப்பாட்டு வரிக் கணக்கில் ரூபா 241,011,145 ஆக செலவு வைக்கப்பபட்ட காரணத்தினால் ரூபா 47,452,805 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. | கணக்கீட்டு மற்றும் கணினி முறைமைகளில் ஏற்படும் மாற்றங்களை சரி செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாக. | கட்டுப்பாட்டு கணக்குகளுடன் சமப்படும் வகையில் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான வீத வரிப்பண பட்டியலிடல் கணினி முறைமையின் படி ரூபா 386,830,114 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 410,690,388 ஆக கணக்கீடு செய்யப்பட்டுள்ளமை யால், ரூபா 23,860,274 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. | வீதவரி பட்டியலிடல் JE07/ 05/2025 மூலம் கணக்குகளை ஒப்பிட்டு சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கணினி முறைமையுடன் ஒப்பீட்டு கணக்குகளை சரி செய்ய வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் நீர் வருமானம், கணினியின் படி ரூபா 1,338,950,516 ஆக இருந்தாலும், பேரேட்டுக் கணக்குகளின் படி ஆண்டிற்கான நீர் வருமானம் ரூபா 1,299,945,609 ஆக இருந்ததால் ரூபா 39,004,907 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. | கணினி முறைமைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை கண்டறிந்து கணக்கீடு செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாக. | - மேற்படி - |

### 1.6.3 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மொத்தம் ரூபா. 245,958,365 பெறுமதியான 03 சொத்து விடயங்கள் மற்றும் 02 பொறுப்பு விடயங்களுக்குரிய ஆவணங்கள் உப ஆவணங்கள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படாததால், கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | இம்மீதிகளை இனங்கண்டு எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஒவ்வொரு கணக்கு மீதியையும் உறுதிப்படுத்துவதற்கு ஆவணங்கள் மற்றும் துணை ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டும் |

### 1.7 இணக்கமிண்மைகள்

#### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளைச் சட்டம் (252 ஆம் அதிகாரம்) | | | |
| | 247 (உ) பிரிவு | 28/12/28/14 ஆம் இலக்க ஜோர்ஜ் டீ சில்வா மாவத்தையில் அமைந்துள்ள 1205/BOD திட்ட இலக்க முடைய ஏலத்தில் செய்யப்பட்ட காணியிலிருந்து 01 சதவீதமான ரூபா. 5,549,500 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | 1205/BOD ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் மூல துண்டுகளாக்கப்பட்டு விற்பனை செய்வதற்கு எதிர்பார்த்த எஞ்சிய காணி துண்டு களுக்காக கண்டி மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டிய 01 சதவீத வரியை | துண்டாக்கப்பட்ட காணியின் விற்பனை பெறுமதியிலிருந்து வரி அறவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | |
| **(ஆ)** | **2022 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய 1249 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2000 மே 26 ஆந் திகதிய கண்டி மாநகர சபையின் உப உறுப்புரை.** | | | |
| (i) | I ஆம் அத்தியா யத்தின் II ஆம் பகுதி 14 ஆம் பிரிவு | சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்திற்காக காசோலைகள் மறுக்கப்படும் போது மறுக்கப்பட்ட காசோலையின் பெறுமதியை பணமாக பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 15 ஆண்டுகளாக இருந்து வரும் ரூபா 7,841,558 தொகையால் 63 மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இம்மீதியில் ரூபா. 538,694 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய ரூபா. 7,841,558 தொகையை குறித்த தரப்பினருக்க தெரியப்படுத்தி அறிவூட்டி மேலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | மறுக்கப்பட்ட காசோலை களுக்குரிய பெற வேண்டிய பணத்தை தீர்வு செய்தல் வேண்டும். |
| (ii) | I ஆம் அத்தியா யத்தின் II ஆம் பகுதி 13(I) ஆம் பிரிவு | குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 51 காணி துண்டு களிலிருந்து ரூபா. 111,332,699 ஆன குத்தகை வாடகை வருமானம் அறவிடப் பட்டிருக்கவில்லை. | மாநகர சபை கூட்டப்பட்ட பின்னர் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் 2013/06 இலக்க சுற்றறிக்கை பிரகாரம் இக் காணிகளை ஒழுங்கு படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை குத்தகை வாடகை அறவிடப்பட வேண்டும். |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் XV ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவு 4.6 மற்றும் 4.7 ஆம் பிரிவுகள்** | உத்தியோகத்தர் ஒருவர் வெளிநாடு செல்லும் போது பிணை முறியின் பெறுமதி ரூபா. 7,304,791 ஆல் குறைத்து கணிப்பிடப்பட் டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட உத்தியோகத்தரின் பிணை பொறுப்பு தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் இன் 4.7 இன் பிரகாரம் சீராக்கம் செய்ய வேண்டுமென அறிய தருகின்றேன். | பிணை பொறுப்பின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஈ)** | **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| | நிதிப் பிரமாணம் 571(3) | 02 ஆண்டுகள் காலங் கடந்த ரூபா 244,425,149 பெறுமதியான 58 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | காலாவதியான வைப்புகளை நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை மேற்கொள்வதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| **(உ)** | **சுற்றறிக்கை** | | | |
| (i) | 2022 சனவரி 12 ஆந் திகதியில் 01/2020(1) ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 4.1 ஆம் பிரிவு | கடமை வீட்டு தொலைபேசி, செல்லிட தொலைபேசி மற்றும் இணையதள வசதிகள் இணைப்புக்களுக்காக 38 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த படியொன்று சம்பளத்துடன் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கையில் அந்த உத்தியோகத்தர்களுக்காக 2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை வரையான காலப்பகுதிற்கு ரூபா 2,034,462 ஆன தொலைபேசி பட்டியல்கள் மாநகர சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சபையால் உத்தியோகததர்களுக்கு வழங்கப்பட்ட கைப்பேசி இணைப்பினை கடமை தொலைபேசியாக கருதி பட்டியல்களைச் செலுத்துவது பொருத்தம் என பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கைப்பேசி, கடமை வீட்டு தொலைபேசி மற்றும் இணைய வசதிகள் இணைப்பிற்கான படிகள் தொடர்புடைய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு இணங்க கொடுப்பனவு செய்துள்ளதாக. | சுற்றறிக்கையின் பிரகாரம் இரண்டு தொலைபேசி படிகள் பெற்றுக் கொள்ள முடியாது என்பதால் கூடுதலாக செலுத்திய படிகளை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ii) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான 98 வாகனங்கள் நீண்ட காலமாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரி சோதனைகளை நடத்துமாறு வாகனங்கள் இணைக்கப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளுக்கும் சபை அறிவித்துள்ளதாக. | எரிபொருள் எரிவு பரிசோதனை குறிப்பிட்ட காலப்பகுதியில் நடத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 656,103,460 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 718,210,138 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபையால் பராமரித்து செல்லப்படுகின்ற 03 வங்கிக் கணக்குகளுக்குரியதாக தயாரித்து சமர்ப்பித்த வங்கி கணக்கிணக்க கூற்றுகளின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங் காணப்படாத பெறுவனவு ரூபா 38,321,267 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | நீர் பிரிவு மூலம் வழங்கப்படும் பெறுவனவு களுக்கிடையே வேறுபாடு காணப்படுவதால் அவ்வேறு பாட்டிற்கு காரணங்களைக் கண்டுபிடித்து சரி செய்யப்பட்வுடன் பற்றுச் சீட்டுகளை வழங்கி சபை அதனை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெறுவனவுகள் இணங்காண தீர்வு செய்யப்பட வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,813,439,000 | 1,786,309,583 | 2,213,789,037 | 293,816,588 | 1,313,439,000 | 1,229,426,926 | 1,195,785,986 | 721,296,042 |
| (ii) | வாடகை | 295,938,000 | 279,508,560 | 185,457,247 | 275,131,902 | 295,938,000 | 256,913,388 | 214,419,265 | 181,080,589 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 45,001,000 | 44,862,954 | 44,862,954 | - | 41,001,000 | 37,926,246 | 37,926,246 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 850,539,000 | 751,040,610 | 883,253,090 | 172,397,758 | 850,539,000 | 830,043,693 | 840,903,061 | 304,610,238 |
| | மொத்தம் | 3,004,917,000 | 2,861,721,707 | 3,327,362,328 | 741,346,248 | 2,500,917,000 | 2,354,310,253 | 2,289,034,558 | 1,206,986,869 |

#### 2.3.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| (i) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 293,816,588 ஆன மீதியொன்று காணப்பட்டது. ஒவ்வொரு அலகிலிருந்தும் ரூபா 100,000 இற்கும் ரூபா 1,000,000 இடைப்பட்ட வீச்சில் நிலுவையாக காணப்பட்ட 399 வீதவரி அலகுகளிலிருந்து ரூபா 109,386,156 தொகையும் ரூபா 1,000,000 இற்கு மேற்பட்ட 12 வீதவரி அலகுகளிலிருந்து | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கும் பதிவழிக்க வேண்டிய வீதவரியை பதிவழிப்பதற்னும் தவறான பட்டியலிடல்களை சரி செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | அறவிட வேண்டிய அனைத்து வீதவரிகளை அறவிட வேண்டியதுடன் தீர்வு செய்ய வேண்டிய மீதிகளை விரைவில் தீர்வு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 30,052,930 தொகையான நிலுவை மீதியொன்றும் இருந்தது. மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 256 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 03 பல்பொருள் அங்காடியில் உள்ள 54 கடைகளில் இருந்த ரூபா 10,763,783 தொகை 02 ஆண்டுகள் முதல் 06 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையில் உள்ள வாடகையை அறவிடுவதற்கும், வசூலிக்கப்படாத தொகைகளை தள்ளுபடி செய்யவும் நடவடிக்கை எடுக்க ஒப்புதல் கோரப்படும். | நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (ii) | பேராதனை வாடி வீட்டிலிருந்து 2019 முதல் மீளாய்வாண்டு வரையிலான காலப்பகுதிக்குரிய ரூபா. 16,834,700 கூட்டுத்தொகையான வாடகை அறவிடப்படவில்லை. | மாநகர சபை முகாமைத்துவம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதுடன், அதன் போது இந்த பணம செலுத்தப்படும் என்றும், ஒவ்வொரு மாதமும் செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள வாடகையைக் குறிப்பிட்டு வெட் இன்வாய்ஸ்கள் அனுப்பப்படும் என்றும் | நிலுவை தொகை உரிய காலத்தில் அறவிடப்பட வேண்டும். |
| **(இ)** | **ஏனைய வருமானம்** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் ˙ உள்ளவாறு நிலுவை நீர் கட்டண வருமானம் ரூபா 383,317,040 ஆக இருந்தது. அதில் ஒரு நிர் பாவனையாளரிடமிருந்து ரூபா 100,000 இற்கும் ரூபா 500,000 இடைப்பட்ட 416 நிர் பாவனையாளர் களிடமிருந்து நிலுவை ரூபா 76,998,193 ஆக காணப்பட்டதுடன் ரூபா 500,000 இற்கும் ரூபா 1,000,000 இடைப்பட்ட வீச்சில் நிலுவையாக காணப்பட்ட 13 பாவனையாளர்களிடமிருந்து ரூபா 21,446,739 தொகையும் ரூபா 1,000,000 இற்கு மேற்பட்ட 40 நீர் பாவனையாளர்களிடமிருந்து ரூபா 114,172,626 தொகையான நிலுவை மீதி காணப்பட்டது. | நீர் கட்டணத்தை செலுத்து அனைத்து பாவனையாளர் களுக்கும் துண்டித்தல் அறிவித்தல் விநியோகிக் கப்பட்டு அவ்வாறான துண்டித்தல் அறிவித்தலுக்கு பொறுப்பேற்றலைத் தெரிவிக்காத பாவனையாளர்களின் நீர் இணைப்பை துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அரச நிறுவனங்களிலிருந்து நீர் கட்டணப் பட்டியலை செலுத்துவதில் முன்னேற்றம் தற்போது குறிப்பிடப்பட்ட அளவு உயர் மட்டத்தில் காணப்படுகின்றதாக. | நிலுவை நீர்க் கட்டணத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் திகதியில் உள்ளவாறு சமமான நீர்மானி வாசிப்பு (Same Reading) ஒரே அளவில் காணப்பட்ட 926 பாவனையாளர்களிடமிருந்து ரூபா 4,502,815 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் இருந்தது. | செயற்படாத நீர்மானிகளை புதுப்பித்தல், குடியிருப்பில் இல்லாத நீர் பாவனையாளர்களுக்கு கடிதம் அனுப்புதல், நீர்மானியை க்டுபிடிக்க முடியாத இடங்களைப் பரீட்சித்து இணைப்பை துண்டிக்கும் செயற்பாட்டிற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற மானி தகவல்களை நதாளதுவரையாக்கல் இடம்பெறுவதாக. | செயலற்ற நீர்மானிகளை அகற்றி புதிய நீர்மானிகளைப் பொருத்தி சரியான முறையான வருமானத்தை சேகரித்தல் வேண்டும். |
| **(ஈ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2024 திசெம்பர் 31 திகதியில்கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணமாக ரூபா 54,831,030 ஆகும். | இத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில், உக்கும் கழிவுகளில் 05 சதவீதம் அளவிலான குறைந்த அளவு உர உற்பத்திக்குப் பயன்படுத்தியதால் சேகரிக்கப்பட்ட கழிவுகளில் 95 சதவீதம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் உற்பத்தி செய்யப்பட்ட உரத்தை சந்தைப்படுத்த ஒரு குறிப்பிட்ட திட்டம் செயல்படுத்தப்பட வில்லை. மீள் சுழற்சி செய்ய முடியாத உக்காத கழிவுகளை சுற்றுச்சூழலில் வெளியேற்று வதைக் குறைப்பதற்காக | வீட்டுச் பயிர்ச்செய்கை நோக்கங்களுக்காக இந்த உரத்தை 5 கி.கி பொதிகளில் விற்பனை செய்வதற்கும் அத்துடன் சபை தீர்மானங்களின் அடிப்படையில் பிரதேச மட்டத்திலும் விற்பனை செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அதுவும் வெற்றிபெறவில்லை. எனவே, கழிவுப்பொருட்கள் பிரச்சினைக்கு தீர்வாக, 5 கி.கி. விலையை ரூபா 60 | சபை கழிவுகளை முகாமை செய்வதற்கும், உற்பத்தி10ளைவ ிற்பனை செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | ஆகக் குறைத்து இலாபம் ஒன்ற இல்லாமல் .நகர மத்தியிலும், வாகன நிறுத்துமிடத்திலும், கொஹாகொட உற்பத்தி தொழிற்சாலையிலும், விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக. | |
| (ஆ) | மாநகர சபையில் வலயங்களில் 2022-2024 காலம் முதல் காணப்பட்ட ரூபா 1,557,950 பெறுமதியான 109 கழிவுப் பொருட்கள் கூடைகள் பொது மக்களுக்கு வழங்கப்படாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக நோக்கத்துக்குட்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | குறித்த வெளிக்களத்தில் 45 பிரிவுகளில் சேவை புரிகின்ற சுகாதார உதவியாளருக்கு கழிவுப்பொருட் கூடைகளை பொதுமக்களுக்கு வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டத எனினும் இந்த கழிவுப் பொருள் கூடைகளின் விலை அதிகரித்த காரணத்தினால் பொதுமக்கள் பெற்றுக் கொள்ளவில்லை என்பதாக. | தேவையான அறிவுறுத்தல் கள் மேற்கொள்ளப்பட்டு கழிவு பொருட் கூடைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 இனங் காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீர் பாவனையாளர்களின் நீர் பட்டியல் கணினி அச்சிட்டு குறிப்பு பதிவின் பிரகாரம் சில நீர் பாவனையாளர்கள் நீர் கட்டணங்களை செலுத்தாமல் இருக்கையில் அச்சீட்டு குறிப்பில் செலுத்தியதாக அச்சிடப்பட்டமையால் நீர் பாவனையாளர்களின் நீர்க் கட்டணங்களில் மிகை ஒன்று அவதானிக்கப்பட்டதாலும் சில நீர் பாவனையாளர்களால் செலுத்தப்பட்ட நீர் கட்டணங்கள் தவறுதலாக அதற்கு கூடிய பெறுமதில் செலுத்தியதாக அச்சிடப்பட்டு இருந்தமையாலும் நீர் கட்டணங்கள் மிகை உருவாகியிருந்தமை காரணத்தினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 06 நீர் பாவனையாளர் களிடமிருந்து ரூபா 835,111 தொகையால் சபை நிதியத்திற்கு நட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. | பாவனையாளர்களால் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் பாவனையாளர் இலக்கங்கள் தவறினால் வேறு பாவனையாளர்கள் கணக்கில் அத்தொகையை செலவு வைக்ககூடியதாக உள்ளதாக | கணினி முறைமையில் தவறுகள் சீராக்கப்பட்டு முறையான கண்காணிப்பின் கீழ் நீர் கட்டணங்கள் வரை விடப்பட வேண்டும் |

## 3.3 வெளிப்படையான மோசடிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 12 இன் 8/7 ஆம் இலக்க பொதுச்சபை தீர்மானம் மற்றும் 2023 நவம்பர் 30 ஆந் திகதிய 746 ஆம் இலக்க முகாமைத்துவ குழு தீர்மானத்தின் மூலம் கிரீஸ் உற்பத்தியுடன் தொடர்புடைய முகவர் நிறுவனங்களில் விலை விவரங்கள் கோருவதற்கு தீர்மானிக்கப் பட்டிருக்கையில் அவ்வாறான முகவர் நிறுவனங்களில் விலை விபரங்கள் கோரல் மேற் கொள்ளாமல் வேறு நிறுவனங்களின் மூலம் மாத்திரம் விபரங்கள் கோரி முகவர் நிறுவனங்களில் விலை விபரங்களை விட அதிக விலை விபரங்களைச் சமர்ப்பித்திருந்த வழங்குனர் களிடமிருந்து முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் மொத்தம் ரூபா 19,860,300 ஆன 4140 கிலோ கிராம் கிரீஸ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது அதன் பிரகாரம் கிரீஸ் உற்பத்தியுடன் தொடர்புடைய முகவர் நிறுவனங்களின் விலை விபரங்களை கருத்தில் கொள்ளாமையால் ரூபா 9,637,560 கூட்டுத்தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | இதுவரை கண்டி மாநகர சபை கிரீஸ் கொள்வனவிற்காக பதிவு செய்யப்பட்ட வழங்குனர் களிடமிருந்து விலை கோரும் முறையை பின்பற்றியே மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் முகவர் நிறுவனங்களிடமிருந்து அல்லது வேறு நிறுவனங்களிடம் இருந்து கேள்வி கோருவதற்கு அழைப்பு செய்யப்படவில்லை என்பதாக. | மாநகர சபை நிதியத்திற்கு ஆகக் கூடிய இலாபம் ஒன்று இடம்பெறும் வகையில் பெறுகை நடைமுறை இனங் காணப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டியதுடன் நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிக்குரிய சிமெந்து கொள்வனவிற்குரிய 2024 மே 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட விலை விபரங்கள் 2024 ஜுன் 12 ஆம் திகதி திறந்த போது 50 கிலோ கிராம் சிமெந்து மூடையின் விலை ரூபா 1,673.73 என குறைவடைந்திருந்தது. அந்த குறைவான விலைக்கு சிமெந்து கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருந்த போதும் 2024 ஜுலை 02 ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 28 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 04 சந்தர்ப்பங்களில் ரூபா 2,250 வீதம் கூடுதலான விலைக்கு 2400 சிமெந்து மூடைகள் கொள்வனவு செய்த காரணத்தினால் ரூபா 1,383,048 ஆன நட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் ஆண்டு முழுவதும் கொள்வனவுக்காக விலை விபரங்கள் கோரி அதன் பிரகாரம் விலை விலகல் / வேறுபாட்டின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது ஆதலால் எதிர்காலத்தில் உடன்படிக்கை செய்யப்பட்ட போதும் கட்டளையொன்றின் வழங்கும் போது தற்போதைய விலை விபரங்கள் அந்த உடன்படிக்கை நிறுவனங்களிடமிருந்து கேட்டு அதன் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | மாநகர சபை நிதியத்திற்கு ஆகக் கூடிய இலாபம் ஒன்று இடம்பெறும் வகையில் பெறுகை நடைமுறை இனங் காணப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டியதுடன் நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விளையாட்டு திணைக்களத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் பெற்றுக்கொள்ளும் போது குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குநர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் அந்நிறுவனத்தில் இருந்து உபகரணங்களை வழங்குவதற்கு முடியாதென எழுத்து மூலம் சான்றுகள் பெற்றுக் கொள்ளாமல் கூடிய விலைகளை சமர்ப்பித்த வழங்குநர் தேர்வு செய்யப்பட்டு கொள்வனவு செய்த காரணத்தினால் ரூபா 1,320,477 நட்டமன்ற ஏற்படுத்தப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை. | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டில் ரூபா 3,420,000 ஆன விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்குரிய 04 விலை கோரல் கிடைத்திருந்ததுடன் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குனர்கள் தொடர்பாக பரிசோதனையின் பிரகாரம் ஒரே முகவரியில் ஒரே கம்பெனியின் விலை விவரங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டதால் சமர்ப்பிக்கப்பட்ட போலி விலை விபரங்களை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்யப் பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | Sun Energy Holding கம்பெனி மற்றும் Eser Marketing Fitness தனியார் கம்பெனி ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் கூறு விலை கோரி அறிவித்து அனுப்பி வைக்கப்பட்டதுடன் அந் நிறுவனங்கள் இரண்டும் விளைவிபரங்களைச் சமர்ப்பிக்கும் போது Sun Energy Holding தனியார் கம்பெனி Treadmill American Fitness T 55A Taiwan இயந்திரத்தை ரூபா 689,000 இற்கும் Eser Marketing Fitness தனியார் கம்பெனி Treadmill XT 185 இயந்திரத்தை ரூபா 703,000 திற்கும் என மாதிரி மற்றும் அமைப்பு மாறுபட்ட வகையில் இரண்டு விலை விபரங்கள் சமர்ப்பித்துள்ளதாக. | உடற்பயிற்சி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் உபகரணங்களை பரீட்சிப்பதற்கு செல்லும் போது இந்நிறுவனங்கள் தொடர்பாக விடயங்களை கவனம் செலுத்தாமல் இருந்தமை தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| 3.4 | **முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபைக்கு ஒப்படைக்கப் பட்ட 1975 ஜுலை 14 திகதிய முதற்கட்ட தளவமைப்பு இலக்கம். 6980 இன் 02 ஆம் இலக்கம் கொண்ட காணியின் 21.70 பேர்ச் பரப்பளவில் ஒரு | விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு, விசாரணை அறிக்கைகள் கிடைத்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டவிரோத குடியிருப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதோடு சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நபர் சட்டவிரோதமாக குடியேறியுள்ளதுடன் மேலும் சட்டவிரோதமாக குடியேறி அந்த நிலத்தின் ஒரு பகுதியை வேறொரு நபருக்கு மாற்றியுள்ளார். மேற்கூறிய குடியிருப்பாளர்கள் ஒரு போலி பத்திரத்தை தயாரித்து பின்னர் அது மனைவிக்கு மாற்றப்பட்ட தாக ஒரு அறிவிப்பு பத்திரம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. | | |
| (ஆ) | கட்டுகஸ்தோட்டை நகர சபையின் 205 மற்றும் 207 மதிப்பீட்டு எண்களைக் கொண்ட தலா 2.22 பேர்ச் கொண்ட இரண்டு காணிகளில், குத்தகை ஒப்பந்தம் இல்லாமல் மற்றும் கட்டணம் வசூலிக்காமல், இரண்டு தரப்பினர் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள நகரசபை அனுமதி அளித்திருந்தது. மேலும், அந்த காணிகளில் அனுமதியின்றி 3 மாடி மற்றும் 2 மாடி கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டது. | புதிய சபை நியமிக்கப்படும் வரை காணி குத்தகை நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், அடுத்த சபை நியமிக்கப்பட்ட பிறகு தொடர்புடைய ஆவணங்கள் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட இருக்கின்றன. | நகராட்சி சபைக்குச் சொந்தமான மிக அதிக வணிக பெறுமதியானநிலங்களை முறையாகவும் திறம்படவும் பயன்படுத்த வேண்டும். மேலும் அங்கீகரிக்கப்படாத நடவடிக்கைகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலக்கம் 88, கட்டுகஸ்தோட்டை மாத்தளை வீதியில் இரண்டு மாடி கட்டிடம் கட்டுவதற்கு 2018 ஜனவரி 04 ஆந் திகதி அபிவிருத்தி அனுமதி வழங்கப்பட்ட போதிலும், 04 மாடிகள் மற்றும் 02 வீடுகளைக் கொண்ட ஒரு கட்டிடம் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக சபை எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. | அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்கள் தொடர்பாக சட்டவிரோதமானது என அறிவிப்புகளை வெளியிடுவதற்கும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குமான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | திட்டமிடல் பிரிவின் செயற்பாடுகள் முறையான மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அபிவிருத்தி அனுமதிகள் மற்றும் இணக்க சான்றிதழ்களை வழங்குதல் முறைப்படுத்தப்பட வேண்டும். மேலும் முறையான பின்தொடர்தல் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | வரி மதிப்பீட்டு இலக்கம் 67 மற்றும் 69 ஐக் கொண்ட இடத்தில் ஒரு கட்டடம் கட்டுவதற்கு 2012 ஒக்டோபர் 11 ஆந் ஒரு வருட காலத்திற்கு அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட போதிலும், 2024 ஜுலை 17 இறகுள் பணியை நிறைவுசெய்யாமைக்கும், காலத்தை நீடிக்காமைக்குமாக | 2016.06.27 ஆந் திகதி வழங்கப்பட்ட திட்டமிடல் குழுவின் தீர்மானத்தின் படி, அபிவிருத்தி அனுமதி இலக்கம் 442 இன் பிரகாரமே நிர்மாணம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தொடர்புடைய நிர்மாண ஒப்பந்தக்காரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடல் பிரிவின் செயல்பாடுகள் முறையான மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டும். மேலும் அபிவிருத்தி அனுமதிகள் மற்றும் இணக்கச் சான்றிதழ்களை வழங்குதல் முறைப்படுத்த வேண்டும் என்பதுடன் முறையான |

| | | | |
|---|---|---|---|
| | சட்ட நடவடிக்கை எடுக்க திட்டமிடல் குழு 2024 ஜுன் 10 ஆந் திகதி பரிந்துரை வழங்கியது. எனினும் இது தொடர்பாக எந்த நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை. | எனினும் நிர்மாணம் முடிக்கப்பட்டு இணக்கச் சான்றிதழுக்கு இதுவரை விண்ணப்பிக்கப்படாமையினூடாக, இந்தக் நிர்மாணம் தொடர்பாக மறு ஆய்வு எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை என்று கோவை யிலிருந்து வெளிப்படுத்தப்பட்டது. | பின்தொடர் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

**3.5. முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 பெப்ரவரி 1 ஆந் திகதி தந்திரோபாய நகர அபிவிருத்தி செயற் திட்டத்தின் மூலம் பணப்பெறுனவை அடிப்படையாகக் கொண்டு வார சந்தை வியாபாரிகளுக்காக அஹலேபொல குமாரஹாமி மாவத்தையில் அமானோ தகடு மேவுகை அமைக்கும் செயற் திட்டத்திற்காக ரூபா 1,714,200 தொகையை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முற்பணங்கள் உரிய காலத்தில் நிரப்பப்பட வேண்டும் |
| (ஆ) | முன்னைய ஆண்டு வெளிப்படுத்தப் பட்டிருந்த மொத்தம் ரூபா 17,125,780 ஆன முறைகேடு தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(4) பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டு அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நி.பி 156(1) சேதம் பற்றிய பொறுப்பு தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய தரப்பினர்கள் இனங் காண்பதற்காக நடவடிக்கை எடுத்து நி.பி. 104(4) பரிசோதனைகளின பரிந்துரைகள் தற்போது வழங்கப்படாததால் மேலும் அறவிடுவதற்கு உள்ளதாக. | குறித்த பரிசோதனையை விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு நட்டங் களை அறவிடுவதற்கும் முறைகேடுகள் தொடர் பாக பொறுப்பான உத்தி யோகத்தர்களை இனங் கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 10 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 179,293,880 ஆக இருந்தது. அதில் 01 இற்கும் 03 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதி மொத்தம் ரூபா 75,049,053 தொகையும் 03 ஆண்டுகளை மிகைத்த மீதி மொத்தம் ரூபா 95,686,505 ஆக இருந்தது. | பெறவேண்டிய நிலுவை குத்தகைய வாடகை மற்றும் கேள்வி கட்டணங்களை அறவிடுவதற்காக இறுதி அறிவித்தல் வழங்கப் பட்டுள்ளதால் மேலும் கொடுப்பனவு மேற் கொள்ளப்படாத கடை உரிமையாளர்களுக்கு எதிராக அடுத்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக மாநகர சட்ட உத்தியோகத்தரிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக. | பெற வேண்டிய தொகையை அறவிட வேண்டும். |

### 3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில், ரூபா 9,985,000 பெறுமதியான 10, 12 மற்றும் 20 மி.மீ அளவழலான 9900 SR வகை உருக்குக் கம்பிகளை வாங்க பெறுகை மற்றும் முகாமைத்துவக் குழு, முடிவு செய்திருந்தது. மிகக் குறைந்த விலையை வழங்கிய நிறுவனத்திடமிருந்து இவ்வாறு பெறப்பட்ட 12 மற்றும் 20 மிமீ கம்பிகள் தர சோதனைக்காக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கு அனுப்பப்பட்டு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் குறித்த அந்த அறிக்கைகளின் படி, குறித்த கம்பிகள் தர சோதனையில் தோல்வியடைந்ததால் குறித்த இருப்பு நிராகரிக்கப்பட்டன. இருப்பினும் வழங்குபவரின் வேண்டுகோளின் பேரில், 10 மிமீ கம்பிகளை பேராதனை பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதற்குப் பதிலாக, அவை மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டு தர சோதனைகள் நிறைவுசெய்யப்பட்டு அவை தரமானது என அறிக்கைகள் பெறப்பட்டு 10 மி.மீ 7500 கம்பிகளை வாங்குவதற்கு ரூபா. 7,336,650 செலவிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக, பெறப்பட்ட அறிக்கைகள் சர்ச்சைக்கரியதாக அவதானிக்கப்பட்டது. | கண்டி மாநகர சபை 10 mm 12 mm , 20 mm உருக்கு கம்பிகள் கொள்வனவிற்காக ஆய்வு கூட அறிக்கைகளை பெற்றுள்ளது 10 mm கம்பிகள் தொடர்பில் மொறட்டுவ பல்கலைக்கழக் கழகதத்திடமிருந்தும் 12 mm 20 mm கம்பிகள் தொடர்பில் பேராதனை பல்கலைக் கழகத்திடமிருந்தும் இரண்டு சந்தர்ப்பங்களில் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 12 mm, 20 mm கம்பிகள் தரத்திற்கு இணங்கவில்லை என்றும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தரத்திற்கு இணங்குகின்றன எனவும் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதாக. | 10, 12, 16, 20 மி.மீ கம்பிகள் அனைத்தும் பேராதனை பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் குறித்த அந்த நேரத்தில் வேலைநிறுத்தங்கள் முடிவடைந்ததால், அனைத்து கம்பிகளையும் பேராதனை பல்கலைக்கழகத்தில் சோதனைகளை மேற் கொண்டிருக்கலாம். |

### 3.7 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விளையாட்டு மைதானத் திணைக்களத்திற்குச் சொந்தமான 08 சமூக நிலையங்கள் 02 மாதங்கள் முதல் 05 ஆண்டுகள் வரை மூடப்பட்டிருந்தன. மூடப்பட்ட சமூக நிலையங்களில் சுமார் ரூபா. 1,862,039 பெறுமதியான உட்கட்டமைப்பு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் இருப்புப் பொருட்கள் விளைவற்று காணப்பட்டன. கடெம்ப மைதானத்தில் | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்த பின்னர் தொடர்புடைய சனசமூக மண்ட பங்களைத் திறந்து உபகரணங்களை வினைத்திறனாக பயன்படுத்த வழங்க முடியும் என்பதாக. | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும் என்பதுடன் பொது சேவைகளை முறையாக வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது , கிரிக்கெட் நிறுவனத்துக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 169,300 பெறுமதியான பொருட் தொகுதியொன்று விளைவற்று காணப்பட்டன. | | |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான ரூபா. 12,446,987 பெறுமதியான 04 வாகனங்கள் 07 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக செயல்படாமலும், போதுமான அளவில் பயன் படுத்தப்படாமலும் இருந்தன. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினூடாக மதிப்பீட்டினைப் பெற்று ஏல விற்பனைக்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது, மேலும் D4C மற்றும் D41A03 இலக்கங் களைக் கொண்ட இயந்திரங்களை பழைய உலோகத்திற்காகவோ அல்லது இயந்திரமாகவோ விற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | பழுதுபார்த்து பயன்படுத்தவோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.8 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) (i) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 40(1)(உ) இன் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியைப் பெறாமல் சஹஸ் உயானவில் உள்ள 100 கடைகள், 15 ஆண்டுகளுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. இந்த கடைகளுக்கு பிரதான மதிப்பீட்டாளரின் 02 மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப் பட்டிருந்த போதிலும் அம் மதிப்பீடுகள் செயற்படுத்தப் பட்டிருக்க வில்லை என்பதுடன் வாடகையும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | முதல் மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட நாளாந்த வாடகை மற்றும் மாதாந்த கடை வாடகைக்கு உள்ள வித்தியாசம் மற்றும் அந்த நேரத்தில் வளாகம் குத்தகைக்கு விடப்பட்டிருப்பதை தெரிவித்து, மீள் மதிப்பீடு 2023 திசெம்பர் 07 ஆந் திகதி கோரி 100 கடைகளுக்குமாக ரூபா. 664,000 மாதாந்த குத்தகை வாடகை மதிப்பீடு 2024 ஒக்டோபர் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு குத்தகை தாரர்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதியைப் பெற்ற பிறகு சபைக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்தாத வகையில் மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் வாடகை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் சஹஸ் உயன சந்தையின் 100 கடைகளை 15 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக 2023 மே 12 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட குத்தகை அழைப்பின் பிராரம் 02 ஏலமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதில் ஒரு மனு நிராகரிக்கப் அது போலியாக தயாரிக்கப் பட்டிருந்ததாக அவதானிக்கப் பட்டது. | ஏலமனுக்களை சமர்ப்பித்த 02 நிறுவனங்களில் ஒன்று சமர்ப்பித்த கையொப்பங்கள் மற்றும் பிற விடயங்கள் மதிப்பீடு செய்யப்பட்டாலும், இறுதி முடிவாக இந்த ஏலமனு அடிப்படை தகுதிகளை பூர்த்தி செய்யாததால் நிராகரிக்கப் பட்டது. மேலும், குத்தகை வாசிக்கப்பட்ட நேரத்தில் ஏலதாரர்கள் பிரசன்னமாக இருந்த போதிலும் இந்த ஏலதாரர் ஏல பாதுகாப்பை சமர்ப்பிக்கவில்லை என்பதாக. | போட்டி ஏல முறையின் கீழ், மாநகர சபை நிதியத்திற்கு எந்த இழப்பையும் ஏற்படுத்தாத வகையில் நடவடிக்கை எடுத்தல், வேண்டும். மேலும் அதற்கு வெளியே முறைகேடுகளைச் செய்யும் ஏலதாரர்கள் மீது தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் போட்டி ஏல முறைக்கு காணப்படும் உள்ளகத் தடைகளை நீக்க வேண்டும். |

**3.9. ஒப்பநந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **சபை கட்டிடத்தின் தரை தளத்தில் கழிவறை அமைப்பு நிர்மாணம் - ரூபா. 4,875,552** | | |
| (i) | 2024 ஜனவரி 30ம் திகதிய உள்ளூராட்சிப் பொறியாளரின் அறிவுறுத்தல்களின் படி, இலக்கம் 4/4/பொறியாளர் (பொது) 05 மில்லியனுக்கும் குறைவான நிர்மாணங்களுக்கான மேல்நிலைச் செலவுகள் மற்றும் இலாபத் தொகையில் 20 சதவீதத்தைச் சேர்க்க அறிவுறுத்தப்பட்ட நிலையில் 2024 ஆகஸ்ட் 30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 26 சதவீத இலாபத் தொகைகள் அடங்கும் வகையில் தயார் செய்யப்பட்டு 37 வேலை விடயங்களுக்கு ரூபா. 371,194 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 2024 கட்டிடத் தர விகிதத்தில் (BSR) குறிப்பிடப்பட்டுள்ள 05 மில்லியனுக்கும் குறைவான மதிப்பீடுகளுக்கான செலவு மற்றும் இலாபத்தொகை 26 சதவீதம் விகிதத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த மதிப்பீடு 05 மில்லியனுக்கும் குறைவான மதிப்பீடு என்பதாக. | மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது தொடர்புடைய ஒழுங்கு படுத்தல் அமைப்புகளால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும். |
| (ii) | வேலை விடய இலக்கம் 26 இன் கீழ் தரை ஓடுகளுக்கு (Floor tile) ரூபா 236,000 மற்றும் வேலை விடய இலக்கம் 27 இன் கீழ் சுவர் ஓடுகளுக்கு (Wall tile) ரூபா | தரைத்தளம் மற்றும் சுவர் தள அளவீடுகளை எடுக்கும் போது, அளவுகளில் விரயமும் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் அளவீட்டின் | மேற்பார்வை அதிகாரிகளின் முறையான மேற்பார்வையின் கீழ் சரியான அளவீடு களைப் பெற்று பணம் |

| | | |
|---|---|---|
| 795,000 என பணம் செலுத்தப்பட்டிருந்தது. தரை ஓடுகளின் பௌதீக பரிசோதனையின் போது தரை ஓடுகள் மற்றும் சுவர் ஓடுகளுக்கு ரூபா 255,960 பணம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. ரூபா. 236,000 மற்றும் வேலை விடய இலக்கம் 27 இன் கீழ் கழிப்வறை சுவர் ஓடுகளுக்கான (Wall tile) உயரம் 1.97 மீட்டர் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பௌதீக ஆய்வின் போது உயரம் 1.79 மீட்டர் என்பது அவதானிக்கப் பட்டதால் 10.16 சதுர மீட்டருக்கு ரூபா. 2481 பிரகாரம் ரூபா 25,207 கூடுதலாக பணம் செலுத்தப்படடிருந்தது. | போது எடுக்கப்பட்ட அளவு நாடாவின் துல்லியம் மற்றும் சுவரின் உயரத்தைப் பதிவு செய்வதில் 1.79 ஏற்பட்ட பிழை காரணமாக 1.97 ஆக பதிவு செய்யப்பட்டதால் மேலதிக கட்டணத்தை சம்பந்தப்பட்ட ஒப்பந்த காரரான கண்டி பல்நோக்கு சேவைகள் கூட்டுறவு சங்கத்திடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.10 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 04 துறைகளில் 317 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 03 துறைகளில் 36 பதவிகளில் மிகைகளும் காணப்பட்டன. பிரதான துறைகள் பலவற்றில் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்ட காரணத்தினால் நிறுவனத்தின் செயலாற்றல் தொடர்பில் பாதகமாக தாக்கமளித்திருந்தது. | வெற்றிடங்களுக்காக பொருத்தமான உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்குமாறு உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்களை நிரப்பி பொது மக்கள் சேவைகளை செயற்திறனாக பராமரித்துச் செல்லல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வுபெற்ற, மரணித்த, சேவையை விட்டுச்சென்ற மற்றும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 196 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 17,941,033 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுவந்த 06 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 783,647 ஆன மீதிகள் 02 ஆண்டுகள் முதல் 04 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக தீர்வு செய்யப்பட்டி ருக்கவில்லை. | மரணித்த, ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச் சென்ற வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பாக நடவடிக்கை கள் எடுக்கப்பட்டு வருவதாக. | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கும் தீர்வு செய்ய வேண்டிய கடன் மீதிகளை தீர்வு செய்வ தற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |